# வள்ளுவர் - வள்ளலாரை கபளீகரம் செய்ய ஒரு கும்பல் சதி !

**முதல்வர் உரை...**

முதல் பக்கத் தொடர்ச்சி

இப்படி, அறிவாலயங்களாக திகழும் நூலகங்களைத் திறந்து வைக்கும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்திருப்பதில் உள்ளபடியே அதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். அதற்காக நான் நம்முடைய ப.சிதம்பரம் அவர்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மரியாதைக்குரிய ப.சிதம்பரம் அவர்களைப் பொருத்தவரைக்கும், அவரே ஒரு நடமாடும் நூலகம்தான்! அரசியல், வரலாறு, சட்டம், பொருளாதாரம், இலக்கியம் என்று எல்லா துறையிலும் ஆழமான அறிவு கொண்ட, அறிவுக் கருவூலம்தான் ப.சிதம்பரம் அவர்கள். நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு திட்டம் குறித்தும், நம்முடைய ப.சிதம்பரம் அவர்கள் என்ன சொல்கிறார் என்று தெரிந்துக் கொள்வதில் நான் ஆர்வமாக இருப்பேன். ஏன் என்றால், அவரின் பார்வையும் அவரின் பாராட்டும் எனக்குத் தனிப்பட்ட முறையில் ஒரு பெரிய உற்சாகத்தைக் கொடுக்கும்!

ப.சிதம்பரம் அவர்கள் ஏற்படுத்தி தந்திருக்கும் இந்தத் தருணத்தில், இங்கு இருப்பவர்களுக்கும் – இந்த நிகழ்ச்சியை தொலைக்காட்சி மற்றும் இணையம் வழியாக பார்த்துக் கொண்டு இருப்பவர்களுக்கும் நான் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். கொடையுள்ளமும் அறிவுத் தாகமும் கொண்டவர்கள், தங்களின் ஊர்களில் இது போன்ற நூலகத்தை உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய நூலகங்களை அமைக்க முடியாதவர்கள், வாய்ப்பு இல்லாதவர்கள், தங்களால் முடிந்த அளவில் படிப்பகங்களையாவது தொடங்கி நடத்தவேண்டும். என்னைப்பொருத்தவரைக்கும் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றபிறகு, எனக்கு யாரும் சால்வையோ, கைத்தறி ஆடைகளோ அணிவிக்க வேண்டாம். அதற்குபதிலாக, புத்தகங்களை வழங்குங்கள், நூல்களை வழங்குங்கள், அதை மற்ற நூலகங்களுக்கு நான் அனுப்பி வைத்து, அது பயன்படக்கூடிய வகையில் அமையும் என்று ஒரு கோரிக்கை வைத்தேன். அந்த அடிப்படையில் இதுவரை 2 இலட்சத்து 75 ஆயிரம் புத்தகங்கள் இதுவரை என் கைக்கு வந்திருக்கிறது. அவற்றையெல்லாம் பல்வேறு நூலகங்களுக்கு நான் அனுப்பிவைத்திருக்கிறேன்.

**முற்போக்குச் சிந்தனைகள் வலுப்பெற நூலகங்களே அடிதளம்!**

நூலகத்தை சுற்றி பார்த்துக்கொண்டிருந்த போது ப.சிதம்பரம் அவர்களிடத்தில் நான் சொன்னேன். இந்த நூல் நிலையத்திற்கு நானும் புத்தகங்களை அனுப்பி வைக்கிறேன் என்று சொன்னேன். அப்படியா மகிழ்ச்சி அனுப்புங்கள் என்று சொன்னார். அந்தக் கோரிக்கையை அவரும் எடுத்து வைத்திருக்கிறார். எனவே, சென்னைக்கு சென்றவுடன் முதல் வேலையாக இங்கு அமைந்திருக்கும் நூலகத்திற்கு முதற்கட்டமாக 1000 நூல்களை அனுப்பவுள்ளேன். நான் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைப்பது என்பது வேறு. அரசின் மூலமாக என்ன செய்ய வேண்டுமோ, அதையும் நான் உறுதியாக செய்வேன் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எதிர்காலத் தலைமுறையினர் கல்வியைக் கடந்து, சமூகத்தை வரலாற்றை அறிந்து கொள்ள முற்போக்குச் சிந்தனைகள் வலுப்பெற இத்தகைய நூலகங்களும் படிப்பகங்களும்தான் அடித்தளமாக அமையும்! அந்த அடித்தளத்தில் உருவாகும் இளைஞர்கள் தான் நம்முடைய தமிழ்ச்சமுதாயத்தை நல்வழியில் வழிநடத்துவார்கள்!

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம் மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம், கோவையில் அமையவுள்ள தந்தை பெரியார் நூலகம் – திருச்சியில் அமையவுள்ள நூலகம் போன்றவை தமிழ்நாட்டுக்கு அடையாளமாக பெருமையாக விளங்குவதுபோல், நீங்கள் அமைக்கும் நூலகங்களும் படிப்பகங்களும் உங்கள் ஊருக்கு அடையாளமாக பெருமையாக அமையும்! தமிழ்ச் சமுதாயத்தை மேம்படுத்தும்! தமிழ்நாட்டை வளப்படுத்தும்! தமிழ்நாட்டு மாணவ மாணவியர், இளைஞர்களை அனைத்துத் துறைக்கும் தகுதிப்படுத்தும்!

நான் மாணவர்களை சந்திக்கும்போதெல்லாம் மறக்காமல் சொல்வது, கல்விதான் யாராலும் திருட முடியாத சொத்து! என்று அடிக்கடி எடுத்துச்சொல்வது உண்டு. எனவே, நம்முடைய இளைஞர்கள் அறிவுச் செல்வத்தை சேர்க்கப் பாடுபடுங்கள்... பொருட்செல்வம் நிச்சயம் உங்களைத் தேடி வரும்!

அதனால்தான், நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்தபிறகு, கல்விக்கு முன்னுரிமை கொடுத்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்.

கல்விக்கான நம்முடைய பணிகளில் சிலவற்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், இன்றைக்கு இந்தியாவிலேயே உயர் கல்வித் துறையில் முதன்மை மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. கடந்த மூன்றரை ஆண்டுகளில் 32 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொடங்கியிருக்கிறோம்.

- ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். போன்ற போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு முதனிலை தேர்வுக்கு மாதம் 7 ஆயிரத்து 500 ரூபாயும், மெயின்ஸ் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மாதம் 25 ஆயிரம் ரூபாயும் வழங்குகிறோம்!
- 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து, ஐ.ஐ.டி, என்.ஐ.டி, போன்ற ஒன்றிய அரசு நிறுவனங்களில் இளநிலை கல்வி பயில சேர்க்கை பெற்றவர்களுக்கு முழு கல்விச் செலவையும் அரசே ஏற்றுக் கொள்கிறோம்.
- நான் முதல்வன் திட்டம் மூலமாக 22 இலட்சத்து 56 ஆயிரம் மாணவர்களுக்கு திறன் பயிற்சி தந்து, பெரு நிறுவனங்களில் பணிபுரிய அவர்களை தகுதிப்படுத்தி வருகிறோம்.
- புதுமைப்பெண் திட்டத்தால், கல்லூரிகளில் சேரும் மாணவியர்களின் எண்ணிக்கை 34 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது.
- தமிழ்ப் புதல்வன் திட்டத்தால் மாணவர்களின் உயர்கல்வி ஆர்வம் அதிகம் ஆகியிருக்கிறது.
- முதல் தலைமுறையாக கல்லூரி வரும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகைக்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.
- ஆயிரம் கோடி ரூபாய் செலவில் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- 150 ரூபாய் கோடி செலவில் உயர்கல்வி நிறுவனங்களில் டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.
- மாணவர்களுக்கான தொழில் திறன் மேம்பாட்டுத் திட்டம்,
- முதலமைச்சரின் ஆராய்ச்சி மானியத் திட்டம்,
- முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகை திட்டம்
- 'உங்களைத் தேடி உயர்கல்வி' – இப்படி என்னால் சொல்லிக்கொண்டே இருக்க முடியும்!

**இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம்!**

இந்த திட்டங்களால் தமிழ்நாட்டில் உயர்கல்வித் தரமும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதனால்தான், இன்று இந்தியாவிலேயே அதிக அளவிலான அரசுப் பல்கலைக்கழகங்கள் உள்ள மாநிலமாக, ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட தரம் வாய்ந்த பொறியியல் கல்லூரிகள் இருக்கும் மாநிலமாக, அதிக அளவிலான மருத்துவக் கல்லூரிகள் இருக்கும் மாநிலமாக, புகழ்பெற்ற 100 உயர்கல்வி நிறுவனங்களில் 31 உயர்கல்வி நிறுவனங்கள் இருக்கும் மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தேசிய சராசரியைவிட இரண்டு மடங்கு அதிகமாக 49 விழுக்காடு பெற்று இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றிருக்கிறது.

இப்படி உயர்கல்வியில் உன்னதமான இடத்தை தமிழ்நாடு பெற்று வருகிறது. அதனால்தான் பல்கலைக்கழகங்களின் நிர்வாகம், மாநில அரசின் முழு கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் – வேந்தர் பதவியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். பள்ளி முதல் உயர்கல்வி வரை ஒவ்வொரு மாணவருக்கும் பார்த்துப் பார்த்துத் திட்டங்களை உருவாக்கிச் செலவு செய்வது மாநில அரசு!

பேராசிரியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் சம்பளம் கொடுப்பது மாநில அரசு! பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருவது மாநில அரசு! ஆனால், வேந்தர் பதவி மட்டும், ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டவருக்கா? அதுதான் நம்முடைய கேள்வி. அதனால்தான் சட்டப்போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை நடத்திக்கொண்டு இருக்கிறோம்! மாநிலத்தின் கல்வி உரிமையை மீட்கும் வரைக்கும் இந்தச் சட்டப்போராட்டங்களும் – அரசியல் போராட்டங்களும் தொடரும்...... என்பதைச் சொல்லி, இங்கு கூடியுள்ள மாணவர்களுக்கு மீண்டும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்து... படியுங்கள்... படியுங்கள்... உயர்கல்வி... ஆராய்ச்சிக் கல்வி என்று தொடர்ந்து படியுங்கள் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## உயர்கல்வியில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள்!

### முதல்வர் பெருமிதம்!

**கல்விக்கான நம்முடைய பணிகளில் சிலவற்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், இன்றைக்கு இந்தியாவிலேயே உயர் கல்வித் துறையில் முதன்மை மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு விளங்கிக்கொண்டிருக்கிறது. கடந்த மூன்றரை ஆண்டுகளில் 32 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொடங்கியிருக்கிறோம்.**

- **ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். போன்ற போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு முதனிலை தேர்வுக்கு மாதம் 7 ஆயிரத்து 500 ரூபாயும், மெயின்ஸ் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மாதம் 25 ஆயிரம் ரூபாயும் வழங்குகிறோம்!**
- **6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து, ஐ.ஐ.டி, என்.ஐ.டி, போன்ற ஒன்றிய அரசு நிறுவனங்களில் இளநிலை கல்வி பயில சேர்க்கை பெற்றவர்களுக்கு முழு கல்விச் செலவையும் அரசே ஏற்றுக்கொள்கிறோம்.**
- **நான் முதல்வன் திட்டம் மூலமாக 22 இலட்சத்து 56 ஆயிரம் மாணவர்களுக்கு திறன் பயிற்சி தந்து, பெரு நிறுவனங்களில் பணிபுரிய அவர்களை தகுதிப்படுத்தி வருகிறோம்.**
- **புதுமைப்பெண் திட்டத்தால், கல்லூரிகளில் சேரும் மாணவியர்களின் எண்ணிக்கை 34 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது.**
- **தமிழ்ப் புதல்வன் திட்டத்தால் மாணவர்களின் உயர்கல்வி ஆர்வம் அதிகம் ஆகியிருக்கிறது.**
- **முதல் தலைமுறையாக கல்லூரி வரும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகைக்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.**
- **ஆயிரம் கோடி ரூபாய் செலவில் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**
- **150 ரூபாய் கோடி செலவில் உயர்கல்வி நிறுவனங்களில் டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.**
- **மாணவர்களுக்கான தொழில் திறன் மேம்பாட்டுத் திட்டம்,**
- **முதலமைச்சரின் ஆராய்ச்சி மானியத் திட்டம்,**
- **முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகை திட்டம்**
- **'உங்களைத் தேடி உயர்கல்வி' – இப்படி என்னால் சொல்லிக்கொண்டே இருக்க முடியும்!**

## கவியரசு முடியரசனார் பெயரில் அரங்கம் !







புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை கிழக்கு ஒன்றியம் மண்டையூரில் நடைபெற்ற மாபெரும் ஜல்லிக்கட்டு போட்டியை மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார். போட்டியில் வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்களுக்கும் காளைகளின் உரிமையாளர்களுக்கும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. முன்னதாக மாடுபிடி வீரர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் மு. பி.ம.சத்தியசீலன், மாவட்ட பிரதிநிதிகள் பி.பாண்டியன், பி.சி.என். கண்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விளாப்பட்டி சிவா, ஒன்றிய கழக நிர்வாகிகள் ரவிச்சந்திரன், காமராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மண்டையூர் மகேந்திரன், விராலிமலை தொகுதி சமூக வலைதள பொறுப்பாளர் ராஜா ஸ்டாலின், மண்டையூர் மூர்த்தி, கே.என்.பாலு நல்லூர் விஜயகாந்த் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர், காவல்துறை அதிகாரிகள், மருத்துவர்கள் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோளை ஏற்று

# யு.ஜி.சி. புதிய விதிமுறைகளுக்கு எதிராக கேரள சட்டப்பேரவையிலும் தீர்மானம்!

**திருவனந்தபுரம், ஜன.23-**

**தமிழ்நாட்டைத் தொடர்ந்து UGC புதிய விதிமுறைகளுக்கு எதிராக கேரள சட்டப்பேரவையிலும் தீர்மானம் நிறைவேற்றம் செய்யப்பட்டது. பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பதில் ஆளுநர்களுக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கும் வகையில் யு.ஜி.சி. வெளியிட்ட புதிய விதிமுறைகளுக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். யுஜிசி இந்த விதிமுறைகளை திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக சட்டப்பேரவையில் ஜனவரி 9 அன்று சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

இந்நிலையில், யு.ஜி.சி.யின் புதிய வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற வேண்டுமென வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர்கள் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு கடிதம் எழுதினார். இதனைத் தொடர்ந்து நாட்டில் பா.ஜ.க. அல்லாத ஆளும் மாநில முதல்வர்களுக்கும் இதுகுறித்து கடிதம் எழுதினார். அந்த கடிதத்தில், யு.ஜி. சி.யின் புதிய வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசை வலியுறுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

டெல்லி, இமாச்சலப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் தெலுங்கானா மாநில முதலமைச்சர்களுக்கு அவர் எழுதிய கடிதத்தில், பல்கலைக்கழகங்களில்துணைவேந்தர்கள் நியமனத்தில் மாநில அரசுகளின் பங்கைக் கட்டுப்படுத்தும் வகையிலும், பல்கலைக் கழகங்களில் இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகளுக்கான சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வுகளை அறிமுகப்படுத்துவது உள்ளிட்ட நிர்வாக நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் வகையிலும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகள் குறித்து தங்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் இந்த வரைவு நெறிமுறைகளை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டுமென்று ஒன்றிய அரசை வலியுறுத்தி ஏற்கெனவே தமிழ்நாடு சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அனைத்து மாநிலங்களும் இதேபோன்ற நிலைப்பாட்டை எடுப்பது அவசியம் என தான் உறுதியாக நம்புவதாகக் குறிப்பிட்டு, தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய இந்தத் தீர்மானத்தைப் போன்று தங்களது மாநில சட்டமன்றங்களிலும் இதுதொடர்பாக தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, யு.ஜி.சி.யின் புதிய விதிகளுக்கு எதிராக கேரள சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. யு.ஜி.சி. வரைவு விதிகளை உடனடியாக திரும்பபெற வேண்டும் என்று தீர்மானத்தை கேரள முதல்வர் பினராயி விஜயன் முன்மொழிந்தார். அதில், "தனியார் துறையை சேர்ந்தவர்களை துணை வேந்தர்களாக நியமித்தால், உயர்கல்வி வணிகமயமாக வழிவகுக்கும். உயர்கல்வியில் ஜனநாயகத்தை முடக்கவே புதிய யு. ஜி.சி. விதிகள் வழிவகுக்கும். யுஜிசி விதிகள் திருத்தம் இந்தியாவின் கூட்டாட்சி முறைக்கும் ஜனநாயகத்துக்கும் எதிரானது," என்று தெரிவித்துள்ளார்.